இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 31-07-2025

# முறையான பதில் சொல்லப்படவில்லை!

‘ஆபரேஷன் சிந்தூர்’ குறித்து விவாதம் நடத்தமாட்டோம் என்று ஒரு வார காலமாக இழுத்தடித்தது ஒன்றிய பா.ஜ.க. அரசு. எதிர்க்கட்சிகளின் கடுமையான எதிர்ப்பைத் தொடர்ந்து 28 ஆம் தேதியன்று விவாதம் நடத்துவதாக ஒப்புக் கொண்டது. ‘ஆபரேஷன் சிந்தூர்’ குறித்து இரண்டு நாட்கள் விவாதம் நடைபெற்றுள்ளது. பிரதமர் மோடி, பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத்சிங், உள்துறை அமைச்சர் அமித்ஷா, வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் ஆகிய முக்கியத் தலைகள் யாரும் முறையான பதிலை நாடாளுமன்றத்தில் அளிக்கவில்லை. வாய்ஜாலம் காட்டினார்களே தவிர, வாய்மையைக் காட்டவில்லை.

பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், “ஆபரேஷன் சிந்தூர் என்ற பெயரில் மேற்கொள்ளப்பட்ட ராணுவ நடவடிக்கையில், பாகிஸ்தானில் செயல்படும் 9 தீவிரவாத முகாம்கள் அழிக்கப்பட்டன. 22 நிமிடங்களில் 100க்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். இதன்பிறகு இந்திய எல்லைப் பகுதிகள் மீது பாகிஸ்தான் ராணுவம் மிகப் பெரிய தாக்குதல் நடத்தியது. இதற்கு தகுந்த பதிலடி கொடுக்கப்பட்டது” என்று சொன்னார். நமது முக்கியமான கேள்வி என்பது, காஷ்மீர் பஹல்காமில் பயங்கரவாதிகள் கொடூரமானத் தாக்குதலை எப்படி நடத்தினார்கள்? எப்படி உள்ளே வந்தார்கள்? அதற்குப் பொறுப்பேற்க வேண்டியது யார்? என்பது ஆகும். அதற்கு இதுவரை யாரும் பதில் அளிக்கவில்லை.

**2014 ஆம் ஆண்டு இந்தியப் பிரதமராகப் பொறுப்பேற்றார் மோடி. மூன்றாவது முறையாக இப்போது பிரதமராக இருக்கிறார். ‘ஒரு இந்தியன் கூட இனி சாக மாட்டான்’ என்று உறுதி அளித்தவர் மோடி. ஆனால் பயங்கரவாதிகள் தாக்குதல் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. இதற்கு பா.ஜ.க. அரசு பொறுப்பேற்க வேண்டாமா? பஹல்காமில் 22 பேர் கொல்லப்பட்டது யாருடைய பலவீனத்தால்?**

**“தேர்வு எழுதும்போது எத்தனை பென்சில், பேனா உடைந்தன என்பது முக்கியம் அல்ல. தேர்வில் வெற்றி பெறுவதுதான் முக்கியம். ஆபரேஷன் சிந்தூரின் போது இந்திய ராணுவ தரப்பில் ஓர் உயிரிழப்பு கூட ஏற்படவில்லை” என்று சொல்லி இருக்கிறார் பாதுகாப்பு அமைச்சர். பயங்கரவாதிகளால் 22 உயிர்கள் பலியானதைச் சொல்லலாமா? எனத் தெரியவில்லை.**

**மிகமிக முக்கியமான அந்தப் பகுதியில் ஒரு பாதுகாப்புப் படை வீரர் கூட இல்லை. உள்ளே நுழைந்த நான்கு பேர், 22 பேரைக் கொன்று விட்டுப் போய் விட்டார்கள். இதற்கான காரணத்தை இதுவரைச் சொல்லவில்லை.**

பிரதமர் பேசி இருக்கிறார். அவர் பேச்சு, இருபது ஆண்டுகள் கழித்துப் பேச வேண்டிய பேச்சாக இருக்கிறது.

“ஆபரேஷன் சிந்தூர் வெற்றியை 140 கோடி இந்தியர்களும் கொண்டாடுகின்றனர். இது இந்திய ராணுவத்தின் மிகப்பெரிய வெற்றியாகும். உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட ஆயுதங்கள் பாகிஸ்தானை துவம்சம் செய்தன. இதற்கு முன்பு இந்தியாவில் தாக்குதல் நடத்திவிட்டு தீவிரவாதிகள் சுதந்திரமாகச் சுற்றித் திரிந்தனர். ஆனால் தற்போது நிலைமை மாறிவிட்டது. ஒட்டுமொத்த உலகமும் இந்தியாவுக்கு ஆதரவு அளித்தது.

இந்திய ராணுவத்தின் தாக்குதலை எதிர்கொள்ள முடியாமல் பாகிஸ்தான் பணிந்தது. போரை நிறுத்தக் கோரி மன்றாடியதால், மே 10ம் தேதி போர் நிறுத்தப்பட்டது” இவைதான் பிரதமர் நரேந்திர மோடி, இந்திய நாட்டுக்கு அளித்துள்ள விளக்கங்கள் ஆகும்.

**இந்தியாவுக்குள் பயங்கரவாதிகள் தைரியமாக உள்ளே நுழைந்து, கொலைகளைச் செய்து விட்டு தப்பி ஓடியதை விட அவமானம், ‘இந்தியாவின் போரை நான்தான் நிறுத்தினேன்’ என்று அமெரிக்க அதிபர் டிரம்ப் சொல்வது ஆகும். அவர் எதற்காக அப்படி சொல்லிக் கொண்டிருக்கிறார் என்பது தெரியவில்லை. ஆனால் அமெரிக்க அதிபரது பொய்யை, பொய் என்று சொல்வதற்கு ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு ஏன் வலிக்கிறது என்று தெரியவில்லை.**

“பாகிஸ்தானுக்கு எதிரான போரை நிறுத்துமாறு உலகின் எந்தத் தலைவரோ, எந்த நாடோ அழுத்தம் கொடுக்கவில்லை. அவர்களின் அழுத்தத்தால் போர் நிறுத்தப்படவில்லை. கடந்த மே 9ம் தேதி அமெரிக்க துணை அதிபர் ஜே.டி.வான்ஸ், என்னை தொடர்பு கொள்ள ஒரு மணி நேரம் முயற்சி செய்தார். பின்னர் நான் அவரோடு பேசினேன். அப்போது அவர் கூறும்போது, ‘பாகிஸ்தான் மிகப்பெரிய தாக்குதலை நடத்தப் போகிறது’ என்றார்.

அவரிடம் மிகவும் தெளிவாகக் கூறினேன். ‘பாகிஸ்தான் தாக்குதல் நடத்தினால், அதற்கான பெரும் விலையைக் கொடுக்க நேரிடும். அவர்கள் துப்பாக்கியால் சுட்டால், நாங்கள் சக்திவாய்ந்த குண்டுகளை வீசுவோம்’ என்று அமெரிக்கத் துணை அதிபரிடம் தெளிவுபடுத்தினேன். இதன் பிறகு பாகிஸ்தானின் ராணுவ பலம் முழுமையாக அழிக்கப்பட்டது” என்று பட்டும் படாமல் பதில் சொல்லி இருக்கிறார் பிரதமர் மோடி. அமெரிக்க அதிபருக்கு எந்த பதிலும் சொல்லவில்லை.

**பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், “வெளிநாட்டு அழுத்தம் காரணமாக போர் நிறுத்தப்பட்டதாகக் கூறப்படுவது முற்றிலும் தவறானது” என்று அமெரிக்கா என்ற பெயரையே சொல்லாமல் பதில் அளித்துள்ளார். வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் பேசும்போது, “ஏப்ரல் 22ம் தேதி முதல் ஜூன் 17ம் தேதி வரை பிரதமர் மோடியும், அமெரிக்க அதிபர் டிரம்பும் எந்த வகையிலும் பேசவில்லை” என்றார்.**

**ஒருமுறையல்ல, 26 முறை சொல்லி இருக்கிறார் அமெரிக்க அதிபர் டிரம்ப். இது இந்தியாவுக்கு உலக நாடுகள் மத்தியில் ஏற்பட்ட அவமானம் அல்லவா? அதற்குப் பிரதமர் பதில் என்ன? அமெரிக்க அதிபருக்கு மறுப்புத் தெரிவிக்க என்ன கூச்சம்? ஏன் பயம்?**

“ஆபரேஷன் சிந்தூர் தற்காலிகமாகவே நிறுத்தப்பட்டு இருக்கிறது” என்று சொல்லி இருக்கிறார் பிரதமர். தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது என்றால், ‘போர் வெற்றி பெற்றுவிட்டது’ என்று சொல்ல முடியுமா? தற்காலிகமாக ஏன் நிறுத்தினீர்கள்? யார் சொல்லி நிறுத்தப்பட்டது?

**ஒன்றிய பா.ஜ.க. அரசின் ‘பலவீனத்தால்’ பஹல்காம் தாக்குதல் நடந்தது. ‘மர்மமான’ முறையில் போர் நிறுத்தப்பட்டது.**



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.7.2025) சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற்ற தமிழ்நாட்டின் புத்தமை (IN2TN) அறிவுசார் சொத்துரிமை முதலாவது மாநாட்டினையொட்டி அமைக்கப்பட்டிருந்த தொழில்நுட்ப கண்காட்சியில், காட்சிப்படுத்தப்பட்ட தமிழ்நாட்டைச் சேர்ந்த 16 ஆராய்ச்சியாளர்களின் காப்புரிமை பெற்ற ஆழ்நிலை கண்டுபிடிப்புகள் அடங்கிய அரங்குகளை பார்வையிட்டு, ஆராய்ச்சியாளர்களுடன் கலந்துரையாடினார். இந்நிகழ்வில், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், மாநிலத் திட்டக்குழுவின் செயல் துணைத் தலைவர் முனைவர் ஜெ.ஜெயரஞ்சன், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அரசு முதன்மைச் செயலாளர் பிரஜேந்திர நவ்னித், ஐ.டி.என்.டி. மையத்தின் தலைமைச் செயல் அலுவலர் திருமதி வனிதா வேணுகோபால், தேசிய ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் (NRDC) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் (ஓய்வு) கமாண்டர் அமித்ரஸ்தோகி, ஜெட்வொர்க்கின் எலக்ட்ரானிக்ஸ் தலைவர் ஜோஷ் ஃபோல்கர், ஐஐடி மெட்ராஸ் ஆராய்ச்சி பூங்காவின் குழு தலைமைச் செயல் அலுவலர் நடராஜன் மல்லுப்பிள்ளை, அஸ்ட்ராஜெனெகா இந்தியா பிரைவேட் லிமிடெட்டின் உலகளாவிய கண்டுபிடிப்பு மற்றும் தொழில்நுட்ப மையத்தின் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைவர் சிவகுமார் பத்மநாபன் மற்றும் ஆராய்ச்சியாளர்கள், கல்லூரி மாணவ, மாணவியர்கள் உடனிருந்தனர்.

### இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட மீனவர்களையும் – மீன்பிடிப் படகுகளையும்

# உடனடியாக விடுவித்திட உரிய தூதரக நடவடிக்கைகள் எடுத்திடுவீர்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் – ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சருக்குக் கடிதம்!

**சென்னை, ஜூலை 31-**

**இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த 14 மீனவர்கள், நேற்று முன்தினம் (29.07.2025) இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், சிறைபிடிக்கப்பட்ட மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப்படகுகளையும் உடனடியாக விடுவிப்பதற்கு உரிய தூதரக நடவடிக்கைகளை எடுக்க வலியுறுத்தி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கருக்கு நேற்று முன்தினம் (29.07.2025) கடிதம் எழுதியுள்ளார்.**

அக்கடிதத்தில், இலங்கைக் கடற்படையினரால் இந்திய மீனவர்கள் தொடர்ந்து தடையின்றி கைது செய்யப்படுவதை ஆழ்ந்த வேதனையுடன் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், இன்று (29-07-2025) காலை இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த ஐந்து மீனவர்கள் இயந்திரமயமாக்கப்பட்ட தங்களது மீன்பிடிப் படகுடன் சிறை பிடிக்கப் பட்டிருப்பதையும், மற்றொரு சம்பவத்தில் ஒன்பது மீனவர்கள் மோட்டார் பொருத்தப்பட்ட தங்களது நாட்டுப் படகுடன் இலங்கைக் கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்டுள்ளதையும் வருத்தத்துடன் குறிப்பிட்டுள்ளார்.

இச்சம்பவங்கள் ஒரு வாரத்திற்கு முன்பு நடந்த மற்றொரு சம்பவத்தின் தொடர்ச்சியாக நடைபெற்றிருப்பதையும், அச்சம்பவத்தில் நான்கு மீனவர்கள் தங்களது இயந்திரமயமாக்கப்பட்ட மீன்பிடிப் படகுடன் இதேபோன்று கைது செய்யப்பட்டதையும் குறிப்பிட் டுள்ள முதலமைச்சர் அவர்கள், இந்த மாதத்தில் மட்டும் இது நான்காவது சம்பவம் என்றும் தனது கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்தத் தொடர்ச்சியான கைது நடவடிக்கைகள், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு பெருத்த மனரீதியான மற்றும் பொருளாதார நெருக்கடியையும், வாழ்வில் நிச்சயமற்ற தன்மையையும் ஏற்படுத்தியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், தற்போது, 235 மீன்பிடிப் படகுகளும், 68 மீனவர்களும் இலங்கை காவலில் உள்ளதாகக் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

நிலைமையின் தீவிரத்தைக் கருத்தில் கொண்டு, இலங்கை அதிகாரிகளின் பிடியில் உள்ள அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விரைவில் விடுவித்திட உரிய தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் அவர்களை, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது கடிதத்தில் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.

### தகவல் தொழில்நுட்பத் துறை சார்பில்

# தமிழ்நாட்டில் முதன்முறையாக அறிவுசார் சொத்துரிமை மாநாடு!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

**சென்னை, ஜூலை 31-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியில் தமிழ்நாடு தகவல் தொழில்நுட்ப துறையில் சிறந்து விளங்கி வருவதாக துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பெருமிதம் தெரிவித்துள்ளார்.**

சென்னை அண்ணா நூற்றாண்டு நூலக அரங்கில், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை சார்பில் “INNOVATE IN TN IP CONCLAVE” மாநாட்டுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.



இந்நிலையில், தமிழ்நாட்டை இந்தியாவின் புதுமை தலைநகராக மாற்றும் கருப்பொருள் கொண்ட அறிவுசார் சொத்துரிமை எனும் இந்த மாநாட்டை துணை முதலமைச்சர் உதயநிதிஸ்டாலின்அவர்கள் தொடங்கி வைத்து மாநாட்டு அரங்குகளை பார்வையிட்டார்.

தமிழ்நாடு முழுவதும் இருந்து 16 ஆராய்ச்சியாளர்கள் தங்கள் காப்புரிமை பெற்ற ஆழ்நிலை கண்டுபிடிப்புகளை காட்சிப்படுத்திய தொழில்நுட்ப கண்காட்சி அரங்குகளையும் துணை முதலமைச்சர் பார்வையிட்டார். அமெரிக்கன் சொசைட்டி ஆஃப் மெக்கானிக்கல் இன்ஜினியர்ஸ் இந்தியா, தேசிய ஆராய்ச்சி மேம்பாட்டுக் கழகம், மத்திய உயர்கணினி மேம்பாட்டு மையம், போஷ் இந்தியா, மஹிந்திரா அண்டு மஹிந்திரா, இந்திய அறிவியல் தொழில்நுட்பம் மற்றும் பொறியியல் வசதிகள் வரைபடம் உள்ளிட்ட 6 நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களும், தமிழ்நாடு தொழில்நுட்ப பரிமாற்ற வசதி மையத்தின் சட்டபூர்வ பங்குதாரர்களின் விருப்பக் கடிதங்களும் பரிமாறிக் கொள்ளப்பட்டது.

மாநாட்டில் சிறப்புரை ஆற்றிய துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாட்டில் அதிக அளவில் தொழில் முதலீடுகள் குவிந்து வருவதாக பெருமிதம் தெரிவித்தார். தொழில் முதலீடுகளை ஈர்ப்பதில் நாட்டிலேயே முதன்மை மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது என்றும் அவர் கூறினார். திராவிட மாடல் அரசு புதிய தொழில்நுட்பங்களை எப்போதும் வரவேற்கிறது என கூறிய துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சி காலத்தில் தகவல் தொழில்நுட்ப துறை சிறந்து விளங்குகிறது என்று தெரிவித்தார்.

இந்த மாநாட்டில் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன், மாநிலத் திட்டக்குழு துணைத் தலைவர் ஜெயரஞ்சன், ஆராய்ச்சியாளர்கள், ஸ்டார்ட் அப் நிறுவனங்கள், தொழில்துறை முதலீட்டாளர்கள், கொள்கை வகுப்பாளர்கள் என 1,500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.